# பிறருக்கு உதவும் பண்புகளும் சரியான நபர்களை தேர்ந்தெடுப்பதும்

**"எள் இரும்பு கம்பளி இடும்பருத்தி வெண்கலம்**
**அள்ளி உண்ட நாதனுக்கோர் ஆடைமாடை வத்திரம்**
**உள்ளிருக்கும் வேதியர்க்கு வற்றதானம் ஈதிரால்**
**மெள்ளவந்து நோய் அனைத்தும் மீண்டிடும் சிவாயமே"**

**என்கிறார்கள் முன்னோர்கள்.**

**இதன் விளக்கம் :**

பசி என வந்தோருக்கு அன்னமிட்டு, தானியங்கள், கம்பளி, போர்வை, பருத்தி ஆடை, வெண்கலப் பாத்திரங்கள் போன்றவைகளை தானமாக கொடுத்து தர்மங்கள் செய்து வாழ வேண்டும். முதுமைநாள் உடல் நலிந்த மற்றும் வீட்டுக்குள் இருக்கும் வேதியர்களுக்கு தேவையான உதவிகளை அவர்களைத் தேடிச் சென்று தானம் தனம் கொடுத்து உதவிட வேண்டும். இதுபோன்று தான, தர்மங்கள் செய்யும் நல் உள்ளங்களுக்கு மெல்ல, மெல்ல வந்த நோய்கள் அனைத்தும் அவர்களை விட்டுவிலகும்.

**பிறருடைய பசியை அகற்றுவதோடு மட்டும் ஒருவருடைய ஒழுக்கமும், கடமையும் முடிந்துவிடாது. பிறருக்கு ஏற்படும் துன்பங்களைக் களையவும் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.**

**அதேபோல பசியில் துன்புற்று கன்னத்தில் கைகளை வைத்துக் கொண்டு கண்களில் நீர் கலந்து வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரம் கொடுத்து அவர்களின் வருத்தத்தை மாற்றுவதே ஜீவகாருண்யமாகும்.**

பொதுவாகவே இவ்வுலகில் மனிதனாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில், தன்னை அறியாமல் பிறருக்கு உதவிகள் செய்ய வேண்டும். உதவிகள் செய்தும் வருகிறார்கள். ஏனென்றால், நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் பிறரிடம் உதவிகள் பெற்றே வாழ்ந்து வருகிறோம். எனவே நாம் ஒருவருக்கு உதவிகள் செய்வது என்பது வாழ்வில் இன்றியமையாதது ஆகும். பிறருக்கு உதவும் பண்புகள் என்பது இயல்பாகவே அனைத்து மனிதபிறப்புகளுக்கும் தோன்றக்கூடிய ஒன்றாகும்.

**பசித்திருப்பவனின் பாத்திரத்தில் உணவு விழுகின்றபோது அந்த உணவு என்பது அவனுக்கு அமிழ்தமாய்த் தெரியும். உண்பவன் முறையாக உண்பான். அதேபோல வீணாக்காது உண்பான். அவனுடைய பசியும் நீங்கும்.**

இவ்வுலகில் பிறந்தது பிற நபர்களுக்கு உதவுவதற்கே என்பதை அறிந்து நாம் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும. நாம் உழைத்துச் சேர்ப்பது துன்பத்தில் ஆழ்ந்தவரின் துன்பன்பதை துடைப்பதற்கே என்பதை அறிந்து பிறருக்கு உதவிகளைச் செய்து அவர்களையும், நம்முடைய குடும்பத்தார்களையும், உறவினர்களையும், நண்பர்களையும், உலகமக்களையும் மகிழ வைத்து நாம் இன்புற்று வாழ வேண்டும். அப்படி வாழ்வதே உன்னதமான மற்றும் உயர்ந்த நிலையை அடையக்கூடிய வாழ்க்கை கிடைக்கப் பெறும்.

**உதவி என்பது கடவுள் தன்மையைக் கொண்டது. உதவுபவர்கள் கடவுளுக்கு இணையாக மதிக்கப்படுவார்கள். நாம் உதவிகள் செய்வதற்கு எந்தத் தகுதியும் தேவை இல்லை. அதற்கு நல்ல மனம் இருந்தால் போதுமே. பிற நபர்களை நம்முடைய நண்பராகவும், நம்முடைய குடும்ப உறுப்பினர்களாகவும், நம்முடைய சகோதர, சகோதரிகள் என்ற எண்ணத்தில் உதவிகள் செய்ய வேண்டும். உதவிகள் செய்வதற்கு எந்த ஒரு அடையாளமும் தேவையில்லை. நாம் நல்ல மனிதராக இருந்தால் அதுவே பிறருக்கு உதவும் தகுதியாகும்.**

நான் இந்த Siddhas Healthy Life Advisory Center மற்றும் இந்த புத்தகங்களையும், இந்த Website-யையும் வணிக நோக்கம் என்ற அடிப்படையில் நான் உருவாக்கவில்லை.

**இன்றைய உலகமக்கள் அனைவரும் ஆரோக்கியமும், ஆன்மீகத் தெளிவும், கடவுளின் தேடலும் மற்றும் வாழ்க்கையின் ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்ற நோக்கத்திலும், மற்றும் அவ்வாறு கற்றுக் கொண்டு நமக்கு பின்பவரும் சந்ததிகளும் பயன்பெற வேண்டுமென்றும், இவ்வுலகில் வாழும் அனைவரும் இன்புற்று ஒருவருக்கொருவர் உதவிகள் செய்து கொண்டும், மற்றும் அனைவரும் கடவுளைத் தேடவேண்டுமென்றும் அந்தத் தேடல் என்பது ஒரு புரிதலுடன் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் நான் இதை இந்த உலக மக்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.**

நமது முன்னோர்களுடைய கருத்துக்களையும், அறிவுரைகளையும், அவர்களுடைய வாழ்க்கை முறைகளையும் முறையாகப் பின்பற்றி வந்தோம் என்றால் மனித வாழ்க்கையானது மேன்மை அடையும் என்றேதான் நான் கூறுவேன். இன்றைய காலக்கட்டத்தில் நாம் அனைவராலும் நமது முன்னோர்களுடைய அறிவுரைகளை மறந்தும், மறக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகிறது. அவற்றையெல்லாம் இன்றைய உலக மக்களோடு சேர்ந்து மீண்டும் புதுப்பிக்கவே இந்த புதிய முயற்சி.

**இன்றைய உலகிலும், இன்றைய காலக் கட்டத்திலும் புதிய எழுத்தாளர்களும், புதிய புத்தகங்களும் வந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அந்த புத்தகங்கள் அனைத்தும் உலக மக்களிடம் சென்றடைகிறதா என்றால் கேள்விக்குறிதான் என்றேதான் நான் கூறுவேன். ஆரோக்கிய வாழ்விற்காக நான் எழுதும் இந்த புத்தகங்கள் அனைத்தும் உலக மக்களிடம் போய் சேரவேண்டுமென்ற இந்த முறைகளை பயன்படுத்தி உள்ளேன்.**

நான் இந்த Website மற்றும் புத்தகத்தின் மூலம் கிடைக்கும் வருவாயின் ஒரு பகுதியை நான் கீழே குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு உதவிகள் புரியலாம் என்ற நோக்கத்திலேயேதான் இவற்றையெல்லாம் நான் உருவாக்கியுள்ளேன்.

**தன்னுடைய வீட்டில் இருந்து வெளியே வரமுடியாமலும், மற்றும் அனைத்து உறவுகளும் இருந்தும், ஆதரவுகள் இன்றி தவித்து வரும் வயதான முதியவர்களுக்கு உதவிகள் செய்யவும்.**

**ஒருவருக்கு உயிரும், உடலும் இருந்தும் அவரைச் சுற்றி நடக்கும் எந்தவிதமான விபரங்களையும், செயல்களையும், நடவடிக்கைகளையும் அறிந்து கொள்ள முடியாதவர்கள்.**

**தன்னிடம் நிறைய திறமைகள் இருந்தும் அதை வெளிக்கொண்டு வரமுடியாமல் இருப்பவர்களும், சிறு குழந்தைகளின் கல்விக்காகவும், ஆதரவின்றி வாழும் சிறுவர்களும், பெரியோர்களும் இது போன்று மேலும் பலர் உள்ளனர்.**

**ஆன்மீகத் தேடலிலும், சித்தர்களின் தேடலிலும், கடவுளின் தேடலிலும் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்கள்.**

இதுபோன்று எங்களுடைய தேடலில் மேலும் பலர் உள்ளனர். அவர்களைக் கண்டு நாங்கள் அவர்களுடைய இடத்திற்கு தேடிச்சென்று உதவிகள் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்த Siddhas Healthy Life Advisory Center மற்றும் மெய்ப்பொருள் காண்பது அரிது, மற்றும் இயற்கையோடு இணைந்திடுவோம், ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கிடுவோம் என்ற புத்தகத்தை உருவாக்கியுள்ளோம். ஒருவர் நோக்கிச் செல்லும் பாதையில் மேலும் பலர் சேர்ந்தால் வெற்றியென்பது மிக எளிதில் கிடைக்கும்.

நான் மேலே குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு எங்களோடு சேர்ந்து உங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய விரும்பினால், நீங்கள் உங்களுடைய மனதிற்கு தகுந்தாற்போல் மற்றும் உங்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலும் உதவிகள் புரியலாம். நீங்கள் விரும்பிச் செய்யப்போகும் உதவித் தொகையானது ரூபாய் 1/-

என்றாலும் அதை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்துவோம் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த Websiteயை பார்த்து அனைவருக்கும் ஆரோக்கிய வாழ்க்கை என்பது எளிதில் கிடைக்கப்பெற என்னுடைய வாழ்த்துக்கள். இந்தப் புத்தகத்தை படிக்கும் நல்ல உள்ளங்களும், நல்ல நண்பர்களும், இயற்கையை நேசிப்பவர்களும், இந்தப் புத்தகத்தை வாங்க விரும்பினாலோ அல்லது உதவிகள் செய்ய விரும்பினாலோ எங்களால் கீழே கொடுக்கப்பட்டுள்ள பணபரிவர்த்தனை முறைகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. **Paytm Account வாயிலாகவும் பணம் Transfer செய்யலாம்.**
   **Paytm Number : 98421 84141**

2. **Bank Account வாயிலாகவும் பணம் Transfer பண்ணலாம்.**
   **S.KRISHNAMOORTHY**
   **Current Account Number : 35468767692 (35468767692)**
   **State Bank, P.C.Patti, Theni Branch.**
   **IFSC Code : SBIN0013834**

புத்தகங்களை வாங்க வேண்டுமென்று விரும்புவர்களுக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கிடைக்க வழிவகை செய்யப்படும்.

**இயற்கையோடு இணைந்திடுவோம் !**
**ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கிடுவோம்!!**

**SIDDHAS HEALTHY LIFE ADVISORY CENTRE**